உ கணபதிதுணை.

நாகமகூளப்பநாயகன்

காதல்.

சுப்பிரதிபகவிராயரால்

பாடப்பட்டது.

திருத்தணிகை-

சரவணப்பெருமாளையரால்-

பரிசோதிக்கப்பட்டு

இவராலும்.

பொய்கைப்பாக்கம்

அப்பாசாமிமுதலியாராலும்

சென்னபட்டணத்தில்-

கல்விவிளக்கவச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

விளம்பி௵ ஐப்பசிமீ.

வி௰- அ௲-அ.

உ கணபதி துணை.

கூளப்ப நாயக்கன் காதல்.

காப்பு.

வெண்பா.

அன்பளிப்பு

போராரும்பெஞ்சைச்பெரியநாகேந்திரன்மேற் ..... ※
சீராருங்காதலையான்செப்பவே-நேராரும் .... ※
அக்கனிதரச்சொலிமுனப்பனைவலத்தில்வரும் .... ※
கைக்கசமுகக்கடவுள்காப்பு .... ※

பொன்மாதுமேவுதிம்மராயபருள்பூண்டிருக்கும் - ※
நன்மாணிதிபெரியநாகயன்மேற்காதல்சொல. - - (க)

வந்துதவுசொன்மதுரவாக்குதவிப்பொருளுந் - - ※
தந்துதவவேண்டுமெங்கள்தந்திமுகத்தானே. - (உ)

ஆளும்பெருமாளகோபிலமால்மெய்யருளோர் - - ※
நாளும்பெறும்பெரியநாகயன்மேற்காதல்சொல. - -(௩)

ஏடுமணிவடமுமேந்துஞ்சரஸ்வதியே - - - ※
பாடுமயிலேறிவருமையனேமுன்னடவாய். - - (௪)

கோமுனிவர்கொண்டாடுங்கூடற்பரஞ்சோதி - *
மாமுனிவர்செம்பொன்மலர்ப்பாதநான்மறவேன். - (ரு)

நாட்டுபுகழ்ப்பெரியநாகயன்மேற்காதலைநான் - - *
சூட்டுகவிநாவலர்முன்சொல்லத்துணிந்ததுதான். - - (சா)

தானந்தவயோகதத்துவமில்லாவொருவன் - - *
ஞானந்தெளிந்தவர்க்குநல்லறிவுசொல்வதொக்கும். - (எ)

தெள்ளமிர்தமூட்டியுரைதித்திவளர்த்தெடுத்தோர் - - *
கிள்ளைகுழறுமொழிகேட்டுமகிழ்வதுபோல். - - (அ)

நன்னயவில்வேள்பெரியநாகேந்திரனென்கவியி - - *
லென்னவழுக்கண்டாலுமின்பமெனக்கொண்டருள்வான். (கூ)

தேனளந்தகானவர்க்குத்தேவரமுதளக்க - - *
வானளந்துநிற்கும்வராககிரிவேந்தன். - - (ய)

கன்னியமுனையொடுகங்கைகலந்ததுபோற் - - *
பொன்னிகலந்தபுனற்குடபமாநதியான். - - (யக)

வண்ணக்குவிமுலையார்மஞ்சள்நீராறோடிப் - - - *
பண்ணைப்பயிர்வளர்க்கும்பாண்டிவளநாடன். - - (யஉ)

வட்டமதிக்களங்கமாறத்தடவுதல்போல் - - - *
இட்டகொடியாமியல்சூழநகபுரியான். - (யங)

கொத்தார்கருங்குழலார்குத்தாழுலைபாயமணி - - *
முத்தாரம்பின்னவிடுமுல்லைதொடைமார்பன். - (௰௪)

ஒகைதந்துபோர்க்களத்திலுட்புகுந்துதான்மூடுகி - - *
வாகைதந்துமீண்டுவரும்வாகைநடனப்பரியான். - (௰௫)

சண்டையிற்பொருங்கெடித்தலந்தகர்த்துவஞ்சமைக்கைக் - *
கொண்டெடுத்தறைந்துரப்புகும்பவுக்ரகுஞ்சரத்தான். (௰௬)

விண்பிறையைவெல்லநிலமீதின்முளைத்தெழுந்த - *
தண்பிறைபோலோங்குந்தவளக்குடையுடையான். - (௰௭)

உடைதிரைகள்குமுறுகடலொலியுமுகிலிடியுமென - - *
வடையலர்கள்செவிகுடையவதிருமொலிமணிமுரசான். (௰௮)

அஞ்சினூர்வாக்கிலிருந்தம்புபோலோடிமட்டு - - *
மிஞ்சினூர்மார்புருவிவீழ்படக்குமாணையினான். - (௰௯)

வட்டநிலம்புரக்குமாரன்குமாரவர்க்கப் - - *
பட்டமெனக்கட்டிவைத்தபட்டாபிஷேகபரன். - - (உ௰)

மிக்கவருட்சொக்கேசர்மீனாட்சிதம்மருளால் - *
திக்குவிசயஞ்செலுத்துகின்றசெங்கோலான் - (உக)

சிற்றமுடனேதான்சிவிகையினிலேறமுன்னே - - *
வேற்றரசர்பின்னிடப்போர்வென்றவருஞ்சேனையினான். (உஉ)

கற்கோட்டையென்றவர்மேற்கண்சிவந்துகண்டவர்செம் - *
பொற்கோட்டையென்னப்புகழுநிலைக்கோட்டையினான். (௨௩)

சிந்தமகூளேந்த்ரசெகராசன்கண்மணிபோல் - - *
வந்ததுரைச்சிங்கமெங்கள்மால்பெரியநாகேந்த்ரன். - (௨௪)

வாணிபுகழ்வல்லக்கர்வார்குலத்தைக்கொண்டுவந்த - - *
தோணியெனும்பெஞ்சைத்துரைபெரியநாகேந்த்ரன். (௨௫)

பொன்னிலங்கவச்ரப்பொடியிலங்கப்பொற்கதவு - - - *
முன்னிலங்கப்பின்னிலங்கமுத்திலங்குவாசலினான். - (௨௬)

ஒட்டகடமானத்தொலிமுழங்கப்பேரிகைதம் - - - *
பட்டமுழங்கப்பரிமுழங்கும்வாசலினான். - - (௨௭)

கட்டிவருஞ்சிங்களத்தார்கப்பம்வரக்காரானைக் - *
குட்டிவரச்சீனர்திறைகொண்டுவருமவாசலினான். - (௨௮)

ஆடைவழங்கவனம்வழங்கயாசகர்க்கு - - *
மாடைவழங்கமனுவழங்கும்வாசலினான். - (௨௯)

சேலாடுங்கூர்விழியார்சென்றாடக்கைவசந்தன் - - *
சோலாடப்பங்கயப்பெண்கூத்தாடும்வாசலினான். - - (௩௰)

மாமறைநூல்பொய்த்தாலும்வாரிதிநீர்பொய்த்தாலுஞ் - *
சோமரவிபொய்த்தாலுஞ்சொன்னமொழிபொய்யாதான். ௩௧)

அண்டர்தருவுக்குமருங்காமதேனுவுக்குங் - - *
கொண்டல்தனக்குங்கொடையிற்றுரசங்கரத்தான். - (௩௨)

சித்தசராசேந்த்ரன்திருமலைகண்டமன்னன் - - *
மைத்துனனேவளாகவரும்பெரியநாகேந்த்ரன். - (௩௩)

நீளும்பெருவாழ்வுநீதிகளுமேமேலோங்க - - - *
ஆளும்புவிபுரக்குமந்நாளிலேயொருநாள். - - (௩௪)

ஆரணஞ்சேர்வையையருந்தீர்த்தந்தானாடி - - *
நாரணனைத்தாள்போற்றிநாமதீர்த்தம்பருகி. - (௩௫)

மிக்ககனகாரியப்பேர்வித்துவசனங்கள்துணை - - *
மக்களுடனின்பரசவுர்க்கவமுதருந்தி. - - - (௩௬)

சந்தனங்கஸ்தூரிசவாதுகதம்பம்பூசிச் - - - *
சுந்தரஞ்சேர்முத்துத்தாராயிலங்கப்பாகைகட்டி. - (௩௭)

மாணிக்கம்பச்சைவயிரவயிடூரியத்தா - - - *
லாணிப்பொன்னாற்சமைத்தவாபரணமுந்தரித்து. - (௩௮)

சங்கீதம்பாடச்சகலசனமும்போற்றச் - - - *
சிங்காசனக்கொலுவிற்றேவேந்த்ரன்போலிருந்தான். - (௩௯)

அந்தமணிமண்டபமாமாஸ்தானந்தன்னிலையன் - *
சிந்தையுற்றவேட்டையின்மேற்சென்றுவரவேண்டுமென்று. சம

கட்டியாரைநோக்கிக்கனவேட்டைக்காரருக்கும் - *
பட்டணத்துச்சேனாபதிகளுக்குஞ்சொல்லுமென்றான். - (௪௧)

அங்கிருந்தகோமானரண்மனையினுட்புகுந்து - - *
தங்கரோக்கைகன்னத்தயங்குநிசார்தொட்டிறுக்கி. - (௪௨)

துப்பட்டாகட்டிவச்ரச்சோடிட்டுத்துணிகட்டி - *
யெரப்பிட்டார்கச்சையுடைப்பட்டையூடுகட்டி. - (௪௩)

வர்ணமணியாழிவளைசமலர்க்கையிலிட்டுச் - - - *
சொர்ணமயமாச்சமைத்ததோற்கவசங்காலிலிட்டு. - (௪௪)

வாய்ந்தவுறைவிட்டால்மருவலர்கள்மார்புறையாய் - *
பாய்ந்தசமுதாடுபொங்கனைத்துவிற்பிடித்து - - (௪௫)

கேழல்புலியானைக்கெர்வங்களையடக்க - - - *
வாளிமலைமுழைவிட்டாலித்தெழுந்ததுபோல். - (௪௬)

புள்ளிருந்தகூர்நெடுவேற்பொசனரண்மனையி - - *
னுள்ளிருந்துகோட்டையொலிமுகத்துவாசல்வந்தான். (௪௭)

கொற்றக்குடைபிடிக்கக்கொம்பூதப்பேரிகையும் - *
வெற்றிமுரசுந்தொனிக்கவீரசின்னந்தான்முழங்க. - (௪௮)

காலின்கடுமைதனைக்காற்கடுமையாக்குமிதன் - - *
காலின்கடுமையெனுங்கந்துகமேற்கொண்டருளி - (௪௯)

வெற்றிவடிவாள்பிடித்துவெம்பரியின்மீதேறிச் - - *
சுற்றமெனச்சுற்றுந்துரைமக்கள்சூழ்ந்துவர, - (௫௰)

ஸ்ரீபப்ரதானிகளுமெச்சுதளகர்த்தர்களுங் - - *
காரியப்பேர்மணியகாரர்கருணீகர்களும். - - (௫௧)

தாக்குதுடியூழியப்ரதாபவசீகரரும் - - - *
ஆக்கமிகுஞ்சேர்வையானகுதிக்காரர்களும், - - (௫௨)

அச்சமில்லாராணுவப்பேரத்தனையுஞ்சோடுகட்டிக் - *
கச்சைகட்டியாயுதமுங்கையுமாய்முன்னடக்க. - (௫௩)

சிங்கத்தையாளுஞ்சென்றுகுத்தியெங்கோமான் - *
தங்கப்பதக்கந்தனைவாங்கவேண்டுமென்றும். - (௫௪)

கண்டபெரும்புலியைக்கைவேலாற்கொன்றுபுலித் - - *
தண்டைமிகுவிருதுதான்வாங்கவேண்டுமென்றும். - (௫௫)

நாட்டஞ்செயும்புலியைச்சுட்டந்தவெம்புலித்தோ - *
லொட்டுமபரிசைக்குரித்துவரவேண்டுமென்றும். - (௫௬)

வெண்கவரியெங்கள்திம்மராயருக்குவீசவெள்ளை - - *
வண்கவரிமானைவெட்டிவால்துணிக்கவேண்டுமென்றும். (௫௭)

வைத்திடும்வைப்பாட்டிபிள்ளைமார்புக்குடையைபண்ணக் *
குத்திப்புலிநகங்கள்கொணர்வரவேண்டுமென்றும். - (௫௮)

கொண்டவிளையகுடியாள்முடி மயிர்க்கு - - - *
மண்டுகருங்கவரிவால்துணிக்கவேண்டுமென்றும். - (௫௯)

வாய்த்தகரடிமணியோர்ப்பிச்செடுத்துக் - - - *
கூத்திக்கிடுமருந்துகூட்டியிடவேண்டுமென்றும். - (௬௰)

ஒன்றொன்றொருவர்மனதூற்றாச்சிலரோக - - *
வென்றிவெடிக்காரர்வேற்காரர்முன்னடக்க. - - (௬௧)

தானைபிடித்தசவளப்பெருக்கமுயர் - - - *
வானம்விழுதுவிட்டவண்ணமாய்முன்னடக்க - - (௬௨)

கொண்டேகுந்தன்மேளக்கொள்கைபோற்பேசுமுகி - *
லுண்டோவிலையோவென்றொட்டகமணுந்துவர. - - (௬௩)

கொட்டுந்துடியுங்குறித்தகரிக்கொம்புகளுங் - - *
கட்டும்பெருவலையுங்கைவேட்டைக்கத்திகளும். - - (௬௪)

காட்டுப்புலிக்கழுத்தைக்கௌவும்புலிபோலக் - - *
கூட்டமிட்டஞாளிகளுங்குத்திட்டியுங்கவணும். - (௬௫)

சால்வயிறுமூன்றுமுழத்தாடிகளுஞ்செந்தலையுங் - - *
காலிலிடுதோலடியுங்காங்கிட்டகசசையுமாய் - (௬௬)

கானவர்கள்வந்துகண்டுகைகுவித்துமுன்னோடச் - -*
சேனைநடுவெள்ளைச்செயடாவிணைத்துவர. - - (௬௭)

போயனுமன்பாய்ந்தபுகழ்பெருமற்கரிணைப் - - - *
பாயத்திரிவதுபோற்பைங்கருடடாலேக. - - (௬௮)

சந்த்ரோதயம்போற்றயங்குஞ்சுருட்டிவரச் - - - *
செந்தூளிகண்டுவேடசினங்குடிவாங்க. - - - (௬௯)

தம்பட்டவோசைதனைக்குமகதங்கலங்க - - - *
கொம்புத்தொனிகேட்டுக்கொச்சிமலையேற - - (௭௰)

மங்களஞ்சேர்பெஞ்சைநகர்வாழ்பெரியநாகேந்த்ரன் - - *
எங்கள்பிரான்வேட்டைக்கெழுந்தருளுமவ்வழியில். - - (௭௧)

போத்தொன்றிடத்திருந்துபோய்வலத்தோர்பூமரத்தில் - *
வாய்த்தபேடொன்றைமருவிக்குரலெழுப்ப - (௭௨)

மண்டலிகர்கண்டனெனுமால்பெரியநாகயவுத் - - - *
கண்டனதுகண்டுநகைதந்துமனமகிழ்ந்து - - (௭௩)

ராசசகுனமென்னராசேந்த்ரன்முன்றேடி - - - - *
யோசனையினாற்சகுனவுண்மையறிந்தானொருவன். - (௭௪)

வந்தெதிரோபோத்துவலம்பாயக்கண்டதனால் - - *
மூர்தவிந்தவேட்டைமுழுவேட்டையாய்க்கிடைக்கும். - (௭௫)

தக்கில்வனப்பேட்டைக்குரலெழுப்பிக்கூடியதாற் - *
கைக்குள்வசமாகவின்றோர்கன்னிமணம்கூடுமென்றான். (௭௬)

அவ்வார்த்தைசொல்லமகாராசீரங்கூளேந்த்ரன் - - *
மைவாய்த்தபல்ரிமலைச்சாரல்வந்தணுகி. - - (௭௭)

நாலிடமுங்கானவரைநாடிவலைகட்டவிட்டு - - *
கோலியகட்டாப்பிற்குழற்காரரைநிறுத்தி. - (௭௮)

எறும்பரிவிட்டிறங்கிப்படைக்கலிப்பு - - *
மீறுந்தொனிமுரசுமேகங்கள்போல்முழங்க. - (௭௯)

வேலாளும்வில்லாளும்வெல்லுமெறியோட்டிக் - - *
காலாளுமாய்ப்பரந்துகாட்டைக்கலைத்துவிட்டார். - (௮௰)

பன்றிமுயல்கரடிபாய்புலிபுல்வாய்கடமா - *
ஒன்றொடொன்றுதட்டுண்டுலைந்துகலைந்தோட. - (௮௧)

எய்வாரும்வேலாலெறிவாருமொன்றையொன்றை - *
வைவாருஞ்சுற்றிமறிப்பாருமாய்நெருங்க. - - (௮௨)

கட்டாப்பில்வந்தகடமாவைப்பின்வாங்க - - *
ஒட்டாமற்குத்தியொளியிருந்தபேரிழுக்க. - (௮௩)

சுட்டபுகைவழியேதூக்கவரும்பன்றியுடல் - - *
தட்டுருவியோடத்தகட்டலகில்வேல்பாய. - - (௮௪)

வாலடித்துமேல்பதுங்கிவாய்பிளக்கவாய்கிழிக்க - *
வேல்பிடித்துவீரர்குத்தவீழ்புலிக்குமேல்துடிக்க. - (௮௫)

வலையில்விழுகாடுமுயல்மனையின்மிசைசுருமலிவிழ - *
அலகின்மிசைபிடரின்மிசையடிகள்விழவுடல்பதற. - (௮௬)

செவ்வியோன்வேசிகையிற்சிக்கியுழல்வதுபோற் - *
கவ்வியநாய்க்காலிற்கவரிமான்வீழ்ந்துழல. - (௮௭)

கூடுமயிற்கூட்டங்கொடுக்கின்றதாதாவைப் - - *
பாடும்புலவோர்கள்போற்பறந்தோட. - - (௮௮)

வட்டமுலையினார்மயக்கறுத்தயோகியைப்போற் - *
கட்டுவலையறுத்தோர்கான்மேதிபோனதுவே. - (௮௯)

கொட்டமிடும்புலியைக்குண்டுதுன்றுங்குழலால் - - *
சுட்டதொனிவெற்பைத்தொடர்ந்துசிலையோட. - (௯௰)

எம்மானிடப்புலியுமிற்றுமுயலும்மானுங் - - *
கைம்மானுஞ்சற்றேகலங்கிமனந்தேற. - - (௯௧)

இவ்வண்ணமையனியல்வேட்டையாடவொரு - - *
செவ்வண்ணமான்வலையிற்சிக்காமலேகுதித்து. - - (௯௨)

பற்றிவரும்பேர்க்கும்பதிகுழற்குமெட்டாமல் - - *
உற்றகவிவாணரைக்கண்டோடுமுலுத்தரைப்போல். - (௯௩)

போங்கதிமைகண்டுபுகழ்பெரியநாகேந்திரன் - - *
வாங்குசிலையும்வடிக்கணையுமாய்விரைந்து - - (௯௪)

மானேடைப்பற்றியன்றுவந்தராகுராமனைப்போல் - *
தானேடைப்பின்னோடித்தாவிக்குதிகுதித்து. - (௧௫)

பாரிவிறகில்லாதபட்சிபோற்செல்லநெடுந் - - *
தூரந்தொடர்ந்துதொடுங்கணைக்குப்பூசையிட்டான். - (௧௬)

மால்தொடர்ந்தமானேர்மயிலைப்பிரித்ததையன் - *
கால்தொடர்ந்தமானேர்கருங்குயிலைக்கூட்டியதே. - (௧௭)

சிங்கத்தின்குட்டிசிலையேந்திச்செல்வதுபோல் - - *
அங்கொருபூங்காவில்விடாயாறத்தனிப்புகுந்தான். - (௧௮)

துன்றுதடஞ்சுனைநீர்தோய்ந்துமலர்த்தாதளைந்து - *
தென்றல்வந்தெனையன்திருமுகத்தில்வேர்வகற்ற. - (௧௯)

கற்பகக்காவிந்திரனைக்கண்டுமலர்சிந்துதல்போற் - *
பொற்புடையோன்மெய்குளிரப்பூங்கானம்பூச்சொரிய. - (௨௰)

சந்தனத்தின்மீதிருந்துசஞ்சரிக்கும்பைங்கிளிகள் - *
சிந்தமன்சேய்க்கின்பம்வரச்சிந்துகவிபாட. - - (௨௧)

இங்கிருக்கும்வேளைநல்லவேகாந்தவேளையென - - *
மங்கைநல்லாள்தானுவிட்டவண்டுபோல்வண்டிரைய. - (௨௨)

மையல்கொண்டமன்னனுக்குமாலையிடவந்துநின்ற - *
தையலார்போலச்சரக்கொன்றைக்கொம்பிலங்க, - (௨௩)

நங்கோன்துரைபெரியநாகேந்திரனவ்வனத்தில் - - ✻
சிங்காரம்பார்த்துலவிச்சிந்தைமகிழ்ம்போதில். - (௱௪)

சாதியொருநான்கின்முதற்சாதியபதுமினியா - - ✻
மாதுநவரத்னமாலையெனும்பெண்பெருமாள். - (௱௫)

மதனகலைவாணிமதனசாதாணி - - - - ✻
மதனாதிக்கேணிமதனசுபகல்யாணி. - - (௱௬)

காமகுருபீடங்காமக்கொலுக்கூடங் - - - ✻
காமகிரீடமின்பக்காமக்கடலோடம், - - (௱௭)

மாமுனிவர்வேதவங்கமாமுனிவரந்தரங்க - - ✻
மாமுனிவரூதுசங்கமாமுனிவர்பிராணலிங்கம். - (௱௮)

தெய்வாதிதேவிதெய்வகுணவாவி - - - - ✻
தெய்வச்செழுங்காவிதெய்வமலைச்சஞ்சீவி. - (௱௯)

கம்மியன்கையாலடித்துக்காய்ச்சிவெட்டித்திராமல் - ✻
செம்மலரோன்கைம்மலராற்செய்துவிட்டபொற்பாவை. (௱௰)

வாய்பேசாவண்ணமதிலொட்டியில்லாமல் - - ✻
தாயபேசப்பேசியின்பந்தந்துலவுரூபசித்ரம். - (௱௰௧)

கையாற்பிடித்தொருவர்கட்டவிதழ்கன்றாமல் - - ✻
மையார்குழலார்மடியிருக்கும்பூமாலை. - - (௱௰௨)

காற்றிலடிபட்டலைந்துகண்மூத்தரும்பாமல் - - *
போற்றிமடவார்வளர்த்தெடுத்தபூங்கரும்பு. - (௱௰௩)

மொய்க்குமணங்குன்றிமுகங்கருகிவாடாமல் - - *
மெய்க்குமணமெத்தாளும்விசுமருக்கொழுந்து. - (௱௰௪)

பொங்கிச்சிவந்துகறுத்துப்புழுங்காமல் - - *
தங்கநிறமாகச்சமைந்தமணப்பாகு. - - (௱௰௫)

ஓங்குமலைக்காட்டினுள்ளிருந்து தூங்காமல் - - - *
தூங்குசப்ரமஞ்சமிசைதூங்குநவாசத்தேன். - (௱௰௬)

மொய்த்தமலைக்காட்டுமுள்ளூடலையாமல் - - *
மெத்தையின்மேலேறிவிளையாடுந்தோகைமயில் - (௱௰௭)

கொம்புதொறும்போய்த்தாவிக்கூவித்திரியாமல் - *
அம்பொன்மணிப்பூசலிருந்தாடுங்குயிற்பேடு. - (௱௰௮)

கொஞ்சிமொழிகுழறிக்கூட்டிற்கிடவாமல் - - *
செஞ்சொன்மதனகலைசெப்புங்கிளிப்பேடு. - (௱௰௯)

அன்னியர்க்குத்தன்னடையைக்கற்பித்தபேடையன்னந் - *
தன்னைநடையிற்றஞ்சாதிபனப்பேடு. - - (௱௨௰)

தேய்ந்துபோகிக்கச்சேர்ந்தகுணம்போகாமல் - - *
தோய்ந்துபோகிக்கத்துலங்குமின்னனாதிமுத்து. - (௱௨௧)

ஒப்பமிட்டசெப்பிலொளித்துக்கிடவாமல் - - *
செப்பமிட்டசெப்பிரண்டுந்தாங்கிவருஞ்சீவரத்னம். (௱௨௨)

நீறனகாமணிமலனூர்மீதில்வைத்த - - - *
மாறுமனவயிரமாற்றவருமாவயிரம். - - (௱௨௩)

கண்ணுக்குட்கண்மணிபோற்கண்மணிக்குட்பாவையைப்போற்
பெண்ணுக்குப்பெண்ணாசைகொள்ளவந்தபெண்ணரசு. (௱௨௪)

அன்றருணமாலையெனுமன்பானபாக்கியைப்பார்த் - *
தின்றெனதுகண்ணிலிடக்கண்துடிக்குதென்றான். - (௱௨௫)

தோளினிடப்பால்துடிக்குதெனவுரைத்த - - *
வாளிநெருடுவெட்டுப்படித்தவரிவிழியாய். - (௱௨௬)

கன்னியழியாதகாரிகையேயின்றனக்குச் - - *
சொன்னனதிகசுபசோபனமுண்டாகுதென்றான். - (௱௨௭)

பாங்கியுரைகேட்டுமற்றைப்பாங்கிமார்தம்முடனே - *
பூங்குழலாள்காவின்மலர்பூவெடுக்கவேண்டுமென்று. (௱௨௮)

பச்சைப்பரிமளங்கள்பாங்காய்க்கலந்தரைத்த - - *
கொச்சிமஞ்சட்பூசிக்குளித்ததிருமேனியின்மேல். (௱௨௯)

சாந்துபுழுகுசவாதுகதம்பம்பூசிக் - - - *
காந்திதரவெண்சலவைகண்டையிட்டசேலைகட்டி. - (௱௩௰)

காவிவரிநெடுங்கட்காரிகைக்குப்பாங்கியர்கள் - - *
சீவிவகுப்பெடுத்துச்சேர்த்துக்குழன்முடித்து. - (௱௩௧)

மைபொழுசிப்பொட்டெழுதிவட்டமிட்டபூண்முலைக்குத் - *
தொய்யிலெழுதித்துணையடிக்குப்பஞ்செழுதி. - (௱௩௨)

ஆடகப்பொன்மெட்டிட்டழகுவெள்ளித்தண்டையிட்டுப் - *
பாடகங்களிட்டுப்பசும்பொற்சதங்கையிட்டு. - - (௱௩௩)

முத்தாரமேகலைமேன்மூன்றடுக்குப்பொன்னரைஞாண் - *
வைத்தாரக்கட்டிமருங்கொட்டியாணமிட்டு. - (௱௩௪)

செய்யகொடிப்பவளஞ்செம்மணிகளீன்றதுபோல் - *
கைவிரலுக்கேற்கரத்னக்கல்மோதிரங்களிட்டார். (௱௩௫)

கட்டிப்பவளங்கனகவளைபொற்கடகந் - - - *
தட்டுச்சரிலையச்சரியாகக்கைக்கணிந்து. - - (௱௩௬)

பட்டிரவிக்கையிட்டுப்பட்டையப்பொற்காறையிட்டு - *
வட்டமுலைமார்பிலங்கவச்ரச்சவடியிட்டார். - (௱௩௭)

மோகனப்பொன்மாலையிட்டுமுத்துமணிமாலையிட்டுப் - *
பூகத்தைவச்ரமணிப்பூஷணங்களால்மறைத்தார். - (௱௩௮)

வாய்க்குமொருவட்டமதிபொருமுத்தீன்றதுபோல் - *
மூக்குத்திமுத்துமுனுத்துக்கிணங்கவிட்டார். - (௱௩௯)

கொத்தளப்பொன்ஞெலையிட்டுக்கொப்பிட்டுவாளியிட்டுச் - *
செந்திருவிற்கேற்கத்தருவும்பிறையுமிட்டு. - (௱௪௰)

கொண்டைச்சுருட்குழுத்துக்குச்சிட்டுக்குப்பியிட்டுத் - *
துண்டப்பிறைக்கிணங்கச்சுட்டியொன்றுகட்டிவிட்டார்.(௱௪௧

பூட்டினார்பொற்சிலைக்குப்பொன்னிடுவார்போலுடைமை *
சூட்டினார்பூமாலைசுற்றினார்தோழியர்கள் - - (௱௪௨)

ஞாலம்புகழுநவரத்னமாலையின்னாள் - - - *
கோலஞ்சிறந்தமலர்கொய்யவென்றுதானடந்தாள். - (௱௪௩)

வங்காரமாலைமுத்துமாலைகுணமாலை - - . *
சிங்காரமாலைதுகழ்மோகனமாலை. - - - (௱௪௪)

சம்போகவல்லிசரசவல்லிகாமவல்லி - - - *
அம்போருகக்கண்ணமிர்தவல்லிநீலவல்லி. - - (௱௪௫)

மோகரத்னமாதாரத்னமுத்துவசந்தரத்ன - - *
நாகரத்னமென்னுமந்தநல்லவுயிர்ப்பாங்கியரும். (௱௪௬)

தானுமாயந்தமலர்ச்சண்பகப்பூங்காவனத்தின் - - *
மானினங்கள்சூழவரும்பிடிபோல்வந்தணுகி. - (௱௪௭)

கொய்யுமலர்வண்டெழுந்துகோகனப்பூவெனச்செங் - *
கைம்மலராச்சுற்றக்கடுகிமலர்ப்பூவெடுத்தாள். - (௱௪௮)

பூங்கொடிபோல்நின்றலவிப்பொன்னையாள்பூவெடுக்கப் *
பாங்கிமாரெல்லாம்பரந்தோடிப்பூவெடுத்தார். - (௨௪௯)

வாளையொத்தசெங்கருங்கண்மாதார்மதராசன் - - *
பாளையத்தைக்கொள்ளையிடும்பண்பாய்மலர்பறித்தார். (௨௫௰)

அங்குநின்றபெண்களெல்லாமங்கங்கேபோய்மறைய - *
இங்குநின்றபேதையினம்பிரிந்தமான்போல. - (௨௫௧

மெல்லத்தனிநடந்துவெட்சியிருவாட்சி - - *
மல்லிகைசெவ்வந்திமலர்த்தபிச்சிப்பூவெடுத்து. - (௨௫௨)

தோட்டுப்பூமுல்லைமுதற்றூயகொடிப்பூவெடுத்துக் - *
கோட்டுப்பூமீதிலந்தக்கொம்பனையாள்மாலானாள். (௨௫௩)

காவியிரண்டிருக்கக்கஞ்சமலராஞ்சிருக்க - - *
பூவினிறங்குன்றப்புனமுருக்கம்பூவிருக்க - (௨௫௪)

கோங்கரும்பிரண்டிருக்கக்கோவையிட்டமுல்லைமுகைப் *
பூங்குமுதத்துள்ளிருக்கப்பூஞ்சண்பகமிருக்க. - (௨௫௫)

பூதலத்திலேதான்பொதிவைத்திரப்பவர்போல் - *
மாதரசிபூந்தமரந்தோறுஞ்சென்றுசென்று. - (௨௫௬)

சாதிரறுஞ்சண்பகமேதாதுளபூந்தாதவியே - - *
கோதிக்குழல்முடிக்கக்கோலமலர்தாரீரோ. - (௨௫௭)

மந்தாரையேசெருந்திமாமரமேநீயெனது - - -*
சந்தாபந்தீரத்தரிக்கமலர்தாரீரோ. - - (௩௫௬)

பாதிரியேகாவிற்பனிநீர்ப்பருமரமே - - - -*
மாதவியேநீயெனக்குவண்ணமலர்தாரீரோ. - -.(௩௬௰)

விண்ணூர்ந்தபுன்னைவிருட்சமேகுங்குமமே - - -*
அண்ணூந்துநிற்குமெனக்கானமலர்தாரீரோ. - - (௩௬௧)

அம்பிட்டகண்ணாரகன்றுவிட்டாருங்களைநான் - - *
கும்பிட்டேன்கோகிலங்காள்கொய்துமலர்தாரீரோ. (௩௬௨)

என்றவுரைகேட்டெழிற்குயிலும்பூங்கிளியுங் - - *
கன்றிமனநாணியந்தக்காவின்புறத்தொதுங்க. -. (௩௬௩)

பூமரத்தினீழலிலோர்பூங்கொடிபோல்நின்றலவித் - *
தாமநறுங்குழலிதாமெருத்தியாகிநின்றாள். - (௩௬௪)

வந்துமிளமுலைப்பெண்ணேகாந்தமாயிருக்க - - *
நாந்தகவீரன்பெரியநாகமகூமீளந்த்ரதுரை. - (௩௬௫)

பண்டிதனைவென்றபகைதீரக்காமனுருக் - - - *
கொண்டிவனைவெல்லக்கூரம்புதேடுதல்போல். - (௩௬௬)

வண்டுலவும்போதுமலர்ந்தபெருஞ்சொலைவளங் - -*
கண்டுலவும்போதெதிர்கண்டான்விழிகுளிர. - (௩௬௭)

நீராமின்னாளோ நிசநாகக்கன்னிகையோ - - - *
சூராமின்னாளோ சுரலோகமேனகையோ. - - (௱௬௮)

கண்ணிமையுமண்ணிலிட்டகாலுமனந்திகைத்த - - *
வெண்ணமகற்றியதாலிவ்வுலகிற்பெண்ணரசே. - (௱௬௯)

என்றெடுத்துமின்னாளிருசெவிக்குமின்பமுறக் - - - *
குன்றெடுத்தபூங்காவிற்கோபாலனுரைக்கலுற்றான். - - (௱௭௰)

ஊடோதிருக்குழலகேதுமதுதிருப் - - - *
பேடோதுவார்த்தையொன்றுபேசினாலாகாதோ. - - (௱௭௧)

ஐவிரலிக்குள்ளேயடர்ந்தசிவனார்க்குத் - - *
மெய்யவடிவெடுத்தசேயிழையுநீர்தாமோ. - - (௱௭௨)

பற்றெழுப்புங்கையாற்பரனெரித்தமன்மதனை - - *
வற்றெழுப்பிக்கொண்டமகராசிநீர்தாமோ. - (௱௭௩)

பண்டுநளரூபம்பலவொடுக்கவேநளனைக் - - *
கண்டுமணமாலையிட்டகாயக்கிநீர்தாமோ. - (௱௭௪)

தெய்வரம்பையின்னார்திருவழகெலாந்திரட்டிக் - - *
கைவருந்தவேதனுமைக்கற்பித்துவிட்டானே. - (௱௭௫)

ஊன்பட்டமென்றுவருமிந்திரனார்பட்டமெலாந் - *
தன்பட்டமாக்குஞ்சமர்த்தியார்நீர்தாமோ. - -(௱௭௬)

தெண்டிரையிலோடிமலைச்செங்கேறிவாய்வெருவிக் - *
கொண்டல்திரிவதுங்கள்கூந்தலுக்குத்தோற்றல்லோ -(௱எஎ)

தேய்ந்தபிறையுங்கள்திருநுதலென்றுலகிலே - - - *
ஆய்ந்தமணிச்சுட்டியணிந்திருக்கக்காணேனே. - (௱எஅ)

பூமன்வளைத்தபுருவத்துக்கந்தாதி - - - - *
காமன்வளைத்தகரும்புருவமொப்பாமோ - - (௱எகூ)

அவ்வேதங்கொண்டவருங்கயல்போலவேதனினி - *
வவ்வேதங்காணப்படைத்தானிருவிழியை. - - (௱அ௰)

சன்னதவேள்கீர்த்திப்ரதாபம்புரிந்தகொலை - - *
உன்னமெனமூன்றுமிருப்பதுங்கள்வாள்விழியே. (௱அக)

வல்லையப்போருக்கொதுங்கேன்வாள்வேல்படைக்கொதுங்கேன்
மெல்லிநல்லீருங்கள்விழியம்புக்கச்சமுற்றேன் - ௱அஉ)

தூக்குமூக்குத்திமுத்துத்தூக்காக்குமிழையுங்கள் - *
மூக்குக்குவமையென்றால்முத்தமிழோர்க்கொவ்வாதே(௱அ௩)

மாங்கனிகபோலமென்றும்வள்ளைகாதொக்குமென்றும் - *
பாங்கிலுவமைகண்டேன்பல்வரிசைக்கென்சொல்லுவேன்(௱அ௪

வித்துருமந்தன்னையுங்கள்மெல்லிதழென்றுவிதிலே - - *
முத்தங்கிடைக்குமதில்முத்தங்கிடையாதே. - (௱அ௫)

இபமானமென்முலையிரிந்துமுகத்திற்கோர் - - - *
உபமானஞ்சொல்லவொருபொருளுங்காணேனே. (௱௮௬)

சங்கழுத்துமுங்கள்தனிக்கழுத்தென்றாலுகிரால் - - *
அங்கழுத்தும்ரோகையுற்பதியமாட்டாதே. - (௱௮௭)

தோளுக்குமூங்கிலிணைசொன்னாற்பெருஞ்சோதி - *
நாளுக்குமின்மினிலையநாவலருஞ்சொல்வாரோ. (௱௮௮)

காந்தளனைஞ்சென்றதுங்கள்கைபோலுந்தானிருக்க - *
வாய்ந்ததவஞ்செய்துவரம்பெறுவேமென்றலவோ. - (௱௮௯)

தம்புருவைமீட்டியிசைத்தந்திதனிலேற்றறியாச் - *
செம்பவளமுங்கள்சிறுவிரலுக்கொப்பாமோ. - (௱௯௰)

வாரத்தைக்குத்தோற்றவனக்கிளியின்மூக்குமுனை - *
சேர்த்தநகமென்றுவமைசெப்பினுலொப்பாமோ (௱௯௧)

யாவினியல்கண்டுபலபாடித்தெரிந்துபெருங் -
காவியத்தைப்பாடிக்கவிஞராங்கேற்றுதல்போல். - (௱௯௨)

முந்தச்செழுங்கமலத்துள்ளேமுளைத்தெழுந்தோன் - *
தந்தச்சிமிள்படைத்துத்தானவுட்டந்தான்படைத்து (௱௯௩)

வம்பைச்சமைத்தவடிவுகண்டுமால்யானைக் - - *
கொம்பைச்சமைத்துக்குணஞ்சற்றதிலறிந்து. - (௱௯௪)

தேங்காயைச்செய்துதிரட்டிகண்டுபொற்குடத்தைப் - *
பாங்காகச்செய்துபணைப்பதிலேகண்டறிந்து. - (௱௯௫)

விந்தைதருமேருமுதல்வெற்பெல்லாஞ்செய்தவன்கை - *
வந்ததற்பினுங்கள்வனமுலையைச்செய்தானோ. - (௱௯௬)

காமனிமையாமல்வைத்தகண்கறுப்புப்பாய்ந்ததுவோ - *
வாமமுலைக்கண்கண்மணிக்கறுப்பையென்சொல்லுவேன். (௱௯௭)

சூரியனுமிந்திரனுந்தம்பிமுகத்தோனுமுங்கள் - - *
பாரமுலையின்பகையடக்கவோபிறந்தார். - (௱௯௮)

ஆலோலவயிறுதனிலாலிலைமேற்பள்ளிகொள்ளு - - *
மாலோவுரோமவகுப்பழகையென்சொல்லுவேன். (௱௯௯)

வந்திச்சுழியைவலமாகச்சுற்றிலுநீ - - - *
ருந்திச்சுழிகளுக்கனுந்திச்சுழியாமோ. - - (௨௱)

மெல்லிநல்லீருங்களிடைமின்கொடிபோலுண்டெனவு - *
மில்லையெனவும்படைக்கவிரண்டுபிரமனுண்டோ. - (௨௱௧)

வாமமுதற்சாதிவடிவிருலல்குலுஞ்செந் - - - *
தாமரைப்பூப்போலிருக்குஞ்சந்தேகம்வேறுமுண்டோ. (௨௱௨

வாழைக்குறங்கல்குல்மண்டபமாமன்மதனுக் - - *
கேழைக்கிரங்குமிடமென்றறியேனே. - - (௨௱௩)

செவ்வால்சௌவிநின்றசிரலவனேமுழந்தான் - - *
அவ்வாரலைச்சுமந்தவாமையோபொன்னடிதான். - (உ௱ச)

அஞ்சுதலைப்பாவோவஞ்சுவிரலும்படமோ - - *
மஞ்சுவரக்கண்டமடமயிலோவுன்சாயல். - (உ௱ரு)

பின்னழகைக்காணில்ரதிப்பெண்ணைமதனறிவனே - *
முன்னழகைக்காணின்முனிவர்தவஞ்செய்வாரோ. (உ௱சா)

சேடியருமில்லாமற்றேன்மொழியிவ்வனத்தில் - *
நாடிவரப்பெற்றதுமுன்னான்செய்தமாதவமோ. - (உ௱எ)

ஏதுமொருவார்த்தையியம்புகிலிருங்களுரை - - *
வேதமோகல்லாலின்மேவுசிவமந்திரமோ. - (உ௱அ)

மேருகிரியுமந்தவெள்ளிமலையும்பார்க்க - - *
நீருத்தரீகமெநகிழவிடமாட்டீரோ. - - (உ௱கூ)

கைப்பணைவைத்துங்கள்கழுத்தின்மணமோர்த்துகொண்டால் - *
ஐயமறச்சங்கமுகமாம்பலனலவோ. - - (உ௱௰)

புளைநத்துகில்சற்றேபுறம்போகச்செய்துவிட்டால் - *
அனந்தசயனத்தலத்தையானறிந்துகொள்வேனே. (உ௱௰க)

தாகமறமுத்தமொன்றுதந்தாலுமதுசக்ர - - *
வாகமுலைக்குமுத்தமாலையாச்சூட்டேனே. - (உ௰உ)

கூளப்பநாயக்கன்காதல்.

என்மார்பிலங்கநகரேகையைவைத்தாலுமது - - *
பொன்மார்பிலங்கரத்நபூஷ்ணமாப்பூட்டேனே. (௨௱௰௩)

பாதியுடலிற்பரமனொருபெண்ணைவைத்தான் - - *
மாதொருத்திதன்னைமணிவண்ணன்மார்பில்வைத்தான். (௨௱௰௪)

செங்கமலவேதனொருதேமொழியைநாவில்வைத்தான் - *
உங்களைநானென்மனதுக்குள்ளிருத்திக்கொள்வேனே. (௨௱௰௫)

யாமத்தாவுமூலமந்தாமுந்தந்தானே - - - - *
காடக்கடலைக்கடந்தமிர்தங்காட்டேனே. - - (௨௱௰௬)

பட்டாடைக்காமன்குளத்தையென்றன்பாரிச[illegible] - *
விட்டாலமுப்போகவிளைவெற்றிக்கொள்வேனே. (௨௱௰௭)

வாழையடிமுக்காணிவட்டமெனக்களித்தால் - - *
வாழையுழுதுபயிரேற்றிப்பிழையேனே. - - (௨௱௰௮)

வற்றாச்சமுத்திரமாமாரனரண்மனைக்குள் - - *
அஸ்தாந்திரமெழுதியாண்மைசெலுத்தேனே. - (௨௱௰௯)

ஆலடிச்செய்யொடரசடிவட்டம்விட்டால்முச் - - *
சாலடித்துநல்வெள்ளைசசம்பாவிளையேனே. - - (௨௨௰)

தாண்டுமிருகத்தனிவேட்டைவந்தவெனை - - - *
மீண்டுமொருகாமவேட்டைவிளையாடவிட்டால். (௨௨௰௧)

கொங்கைமலைபற்றிக்குரலெழுப்பியேதிநடுப் - - - *
பொங்குதுகலைகுலையப்புல்லுமளாயுள்ளாக்கி. - - (உஉஉ)

சாய்ந்தவிழிமானிரண்டுஞ்சண்பகக்காட்டிற்குறித்துப் - *
பாய்ந்துகுயிழோடொதுங்கிநின்றுபரதவிக்க. - (உஉங)

மோகவலைக்குழயற்சிக்குமின்பமுற - - - *
வாகமலைப்பன்றியடுத்தொருகைபாரோறே. - - (உஉச)

டன்னிப்பாவென்னைவரவழைத்துநீருமது - - *
கன்னிப்போராகக்கலவிப்போர்க்கென்னைவிட்டால். -(உஉரு)

காமத்தேரோற்றன்றுக்கட்டியிறுகக்கலந்து - - *
தாமவேல்பாயச்சமரின்றுனைகாட்டி. - - (உஉசு)

முன்னணியும்பின்னணியுமொய்த்தகுழல்வகுட்பும் - - *
பின்னிடதன்னூலிடைப்ரதாபக்கொடியாட. - - (உஉஎ)

தண்டையொலிமேளந்தாளநெகிழ்ந்தகுழல் - - . - *
வண்டுபுறங்கொடுத்தமாற்றலர்கள்போற்பறக்க. - (உஉஅ)

வெம்பியெனைப்பாய்ந்தடரவிட்டதனபாரமெனும் - - *
கம்பமதயானைதனைக்கைப்பிடியாகப்பிடித்து. - (உஉகா)

சங்கமுழங்கச்சரிபோகப்போர்முடித்து - - - *
செங்கைக்கருப்புச்சிலைமதனைவெல்லலேறே. - (உங௰)

மேலுலகந்தன்னைவிட்டுமேதினியில்வந்தரம்பை - - - *
போலுமுங்கள்யௌவனமாம்பொய்கைதனிலென்னைவிட்டால்.

ஆடையொருபக்கமணையிற்கிடக்கவிதழ் - - - - *
மூடுமிரண்டுமுளரிகளென்மார்பழுந்த. - - (உகூஉ)

ஓர்தாமரைப்பூவுகந்தென்முகத்தணைய - - - *
ஓர்தாமரைப்பூவுலாவிமுலைகைத்தடவ. - - (உகூங)

பின்னொருசெந்தாமரைப்பூப்பின்பிடரிபூடுவரக் - - *
கன்னியராற்சோடுகலந்திடுப்பினாடொதுங்க. - (உகூச)

என்மீதுதாவியிருகெண்டைபோராட - - - *
மென்மாமலர்க்குமுதமெல்லமெல்லத்தேனூற. - (உகூரு)

சைவலமோர்பாற்குலையச்சங்கொலிப்பவீழ்ந்தெனது - *
மெய்குளிரத்தோய்ந்துவிரகவிடாய்தீர்ந்தேனே. - - (உகூசு)

தங்கவிளையாட்டித்தனிப்பிடமீதுசது - - - *
ரங்கவிளையாட்டுக்களைத்தீரோயாமாகில். - - (உகூஎ)

கால்பலன்கொண்டேற்றியிருகாரானைமுட்டவிட்டு - - *
நாலுமுகத்துநடத்துபரிசுற்றவிட்டு. - - (உகூஅ)

எட்டெட்டினுக்குமிணங்கச்சகடேற்றித் - - - *
தொட்டதொட்டவாட்டமெலாந்தோலாமல்வெல்லேனே(உகூகூ

காதோடுவாதாடுங்கண்மடவீரொன்றியிலே - - *
சூதாடவென்னைவரச்சொல்லியழைத்திராகில். - -(௨௪௰)

குங்குமக்காய்ச்சோடிரண்டுங்கூட்டிக்கலந்தாடி - - *
அங்கம்பசலைக்காயத்தனையும்போகவிட்டு. - - (௨௪௧)

விந்தைதருஞ்சிவப்பைமெல்லவராநிறுத்தி - - *
அந்தக்கறுப்பையெல்லாம்பின்னையலையவிட்டு. - (௨௪௨)

ஒருக்காலிருக்காலோடொப்பாறுமாறும் - - - *
பெருக்காகலக்கம்பிசகாமலேயாடி. - - (௨௪௩)

கண்பார்த்துநீங்கள்வெட்டிக்கட்டித்தொடர்ந்தேறிப் - *
பண்பாகவீட்டிற்படுத்துவிளையாடேனோ. - (௨௪௪)

நற்காமபூசைநடத்திடவே நீங்கள்சொன்னால் - - - *
விற்காமதெய்வவிரதந்தனிலிருந்து. - - (௨௪௫)

மோகசமுத்திரத்தின்மூழ்கிமதன்மந்திரமும் - - *
ஆகவுருவேற்றியந்தக்கரணமுடன். - - -(௨௪௬)

கன்னலொடுதேமாங்கனியருந்திச்செவ்விளநீர் - - - *
தன்னைப்பருகிநித்லைச்சத்துருவைத்தானகற்றி. - - (௨௪௭)

சாமஞ்சாமந்தோறுஞ்சங்கநாதத்துடனே - - *
நேமமொடுபூசைநிறைவேற்றிக்கொள்வேனோ. - -(௨௪௮)

இந்நேரமென்சொற்கிரங்குவீரெப்படியும் - - *
மின்னேயுமைக்கலந்துமேவாமற்போவேனோ. - (உசகூ)

ஓடிவலைகட்டிபொதுக்காமலேயெளிதில் - - - *
நாடியபொன்மானைநான்விட்டகல்வேனோ. - - (உருய)

தாப்பானகாடுந்தடவரையுஞ்சுற்றாமல் - - - *
வாய்ப்பாகவந்தமயிலைவிட்டுப்போவேனோ. - - (உருக)

விண்டிறநுந்தேன்சொரியுமென்கமலப்போதுகண்ட - - *
வண்டுபடிந்துண்டுமகிழாமற்போவதுண்டோ. - (உருஉ)

காந்தர்வநியாயமெனக்கண்டவுடனேயிணங்கித் - - - *
தோய்ந்திடுகல்யாணமகாசோபனகல்யாணமன்றோ. (உருங)

காருரும்வள்ளிதனைக்கந்தனார்கூடியதும் - - - *
மாரூர்சுபத்திரையைவாள்விஜயன்கூடியதும். - (உருச)

தாங்களேசம்மதித்தோதந்தைதாய்சம்மதித்தோ - - *
மாங்குயிலேயென்னைமருவுவதேகாரியங்காண். - - (உருரு)

மூலைக்கோட்டையுள்ளமுத்துமோகனமேயென்னை - - *
நிலைகோட்டைவேந்தனென்றுநீர்தாமறியீரோ. - (உருசு)

நானூறவபுரியாரூரியர்சிகாமணிநீ - - - - *
தானூறவாத்தமாலையென்றுற்றுழ்வாமோ. - - (உருஎ)

கண்ணாரக்காணுமுன்னங்காதாரச்சொற்கேட்டு - - *
நண்ணார்புகழ்பெரியநாகமகூளேந்திரதுரை. - (௨௭௬)

மின்னைநிறுத்திவருமேகம்போன்மோகமின்னாள் - *
தன்னைநிறுத்திவந்துதானைக்கெதிரானான். - (௨௭௭)

கானிலிருந்தையன்வரக்கண்டோர்முகங்களெல்லாம் - *
பானுவரக்கண்டபங்கயம்போலாயினவே. - (௨௭௮)

கொண்டல்படிக்குங்கொடைப்பெரியநாகேந்த்ரன் - *
தண்டிகையிலேறியந்தச்சம்பகப்பூங்காவகன்றான். - (௨௭௯)

மந்த்ரிதளகர்த்தர்வரமாசேனைமுன்னடக்கத் - - *
தந்த்ரதுரைமக்களுடன்சந்தையூர்க்கேமுகமாய். - (௨௮௰)

வந்துநவபுரியில்வாழுமகோபிலமால் - - - *
செந்திருவின்பாதமலர்சேவித்துத்தெண்டனிட்டு. - (௨௮௧)

தீர்த்தருடன்மாலைதிருவடிபெற்றுண்மகிழ்ந்து - - *
வார்த்தைதவறுதகண்டன்மால்யானைமீதேறி. - (௨௮௨)

தாரைநவுரிதவண்டைதுடிநாகசுரம் - - - *
பேரிகையெக்காளம்பெரியமேளந்தொனிக்க. - (௨௮௩)

கஞ்சுகியர்கைப்பிரம்பர்கட்டியர்முன்கைநீட்டிப் - *
பெஞ்சைநகர்வேந்தாப்ரதாபநிகளங்கமல்லா. - (௨௮௪)

துங்காசுவாமிதுரைராசகண்டஜய - - - - ✻
ரங்காரணவீமராயாரவுத்ரபிண்டா. - - (௨௮௫)

தீரசுத்தவீரசுப்ரதீபகர்த்தநாவலர்க்கு - - - ✻
தாரசத்ருசேதநற்ப்ரதாபவஜ்ரதேகவுக்ரா. - (௨௮௬)

மகதரங்கர்கவுடர்வங்கர்வடகலிங்கர்குடகர்கொங்கர் - ✻
குகுதர்வந்துபணியுமிந்த்ரகொலுவிருந்தபுவனசந்த்ரா. (௨௮௭)

சாமீபராக்குபராக்கெச்சரிக்கையெனச் - - ✻
சோமோதயம்போற்றுலங்குகுடைநிழற்ற - (௨௮௮)

பக்கக்கவரிரட்டைப்பாவாடைவீசிவர - - - ✻
மைக்கட்குமரியர்களாலாத்திவந்தேந்த - - (௨௮௯)

மாலைசரியவருவார்சிலமடவார் - - - - ✻
சேலைசரியவருவார்சிலமடவார். - - - (௨௯௰)

தண்டுலவும்பைந்தார்தருவானெனவோடி - - ✻
வண்ணவளைதோற்றுவருவார்சிலமடவார். - (௨௯௧)

தேர்புகழ்வேந்தனுடன்செல்லுமனதைப்பிடிக்க - ✻
ஓடுதல்போலோடியடியோய்வார்சிலமடவார். - (௨௯௨)

வல்லியனையாள்பதித்தவாய்வடுவைக்கண்டுதங்கள் - ✻
மெல்லிதழிற்பற்பதித்துமீள்வார்சிலமடவார். - (௨௯௩)

ஒருமானைப்பற்றிவிளைந்தோடிய'வாள்வேந்தன் - ❋
வருமானனேகமெதிர்வந்துநிற்கப்பாராமல் - (௨௯௪)

வாழிசநுவசித்திவாரணைத்திற்றுனிறங்கி - - ❋
ஆழியனையான்பொன்னரண்மனைக்குள்வந்திருந்தான். (௨௯௫)

இங்கேதுரைப்பெரியநாகேந்த்ரன்வீற்றிருக்க - - ❋
அங்கேகடலர்க்காவிலன்னநடைப்பெண்பெருமாள். - (௨௯௬)

போராளன்பெஞ்சைப்பெரியநாகேந்த்ரதுரை - - ❋
வாராமைகண்டுமெறிமறந்துமெய்சோர்ந்தாள். - (௨௯௭)

ஆனைதனைக்காணுதரும்பிடிபோய்ப்பார்ப்பதுபோல் - ❋
மானனையாளந்தமலர்மண்டபமுநீர்ச்சுனையும். - (௨௯௮)

தேடினுள்மூச்செறிந்தாள்செங்கமலத்தாள்சிவப்ப - ❋
ஓடினளெங்கோனுருவெளியைத்தெண்டனிட்டாள், (௨௯௯)

என்னிடத்திற்கோபமேதென்றுளெழுந்திருந்தாள். - ❋
கன்னல்வில்லைத்தாங்கொருவன்வந்தெதிர்ப்பக்கண்டயர்ந்தாள்.

காடுருவக்காமனெய்தகைப்பாணஞ்செப்புமுலை - - ❋
பூருவவைவேலுருவியமான்போலுழன்றாள். - (௩௱௧)

காலாயுதக்கொடியோன்கையாயுதவழியே - - ❋
மாலாயுதமீண்டமாமணியையத்தாளுயிர்த்தாள். - (௩௱௨)

௯. ஏப்பநாயக்கன்காதல்.

போதிபகலாமாதவியேபுன்னையேசம்பகமே. - - *
கற்பகமேயென்றுனைக்கற்பகத்தைக்காணீரோ. - (௯௱௩)

காவாசேயாயிரச்செங்கண்ணரசுபோலிருக்கும் - *
பூவரசேபெஞ்சைசப்புவியீரலைசக்காணீரோ. - (௯௱௪)

ஏன்மாண்பிணைநடக்கமோகமாய்ப்பின்றொடரும் - *
பொன்மானேயென்றுனைப்பூமானைக்காணீரோ. - (௯௱௫)

தோய்ந்தரவியைத்தொடர்ந்தமுகசூர்ய - - - *
காந்தமேயென்றுனைக்காந்தன்வரக்காணீரோ. - (௯௱௬)

என்னிடத்தின்மாலாகிப்பிச்சைசொல்லிச்சேர்ந்ததுனை - *
பின்னெனக்கோரந்தரங்கம்பேசாமற்போவானே. - (௯௱௭)

கானிடத்திலுனைக்கண்டுதனியாகவந்து - - *
வானவர்கோனென்னைமணமுருக்கிச்சேர்ந்தானே. - (௯௱௮)

தந்திரிகொள்வீணைதனையொளித்துவந்துதெய்வ - *
கந்தருவனென்னைக்கருத்துருக்கிச்சேர்ந்தானே. - (௯௱௯)

இந்திரனேயானுங்கண்ணினான்றானென்பதுண்டே - *
கந்தருவனேயானுங்கண்ணிமைக்கக்காரியமேன். - (௯௱௰)

பெய்யுங்கொடையான்பெரியநாகேந்திரதுனை - - *
ஐயனைத்தல்லாலையமினிவேறுமுண்டோ. - (௯௱௰௧)

மன்மதனைவென்றவயங்குந்திருவழகை - - - *
என்மனதுக்குள்ளேயெழுதவோவந்தகன்றான். - (௩௱௰௨)

கூடியின்பங்கண்டகுதலைமொழிப்பேதைநம்மைத் - *
தேடிமுகம்வாடித்தியங்குவளென்றெண்ணுறோ. - (௩௱௰௩)

இந்தக்கவடுசெய்வானென்றறிந்தாற்கைகலக்கும் - - *
மூந்தக்குடிலயிட்டுமூன்றணைகொள்ளேனோ. - (௩௱௰௪)

தன்னெஞ்சம்போலத்தழுவிப்பிரிந்திருக்க .. - *
வன்னெஞ்சியென்றேமறக்கத்துணிந்தானே. - (௩௱௰௫)

டேளூர்வழியேநாம்பின்றொடர்வோமென்றாலும் - *
ஓரூபொன்றுனிலையேயொன்பதுபொன்றனே. - (௩௱௰௬)

என்றிரங்கும்வேளையிருஞ்சேவலைப்பிரிந்த - - *
அன்றிலெனத்தானேசிறியாளறிவயர்ந்தாள். - (௩௱௰௭)

இவ்விடத்தின்மெய்சோர்ந்திவள்கிடக்கவெவ்வேறாய் - *
அவ்விடத்திற்பூவெடுத்தவாயிழையாரெல்லோரும். (௩௱௰௮)

குன்றிரண்டுதாங்குங்கொடிபோலிடைதுவள - - *
நின்றமலர்பறித்தநேரிழையைக்காணமல். - (௩௱௰௯)

மற்றோர்வனமோநாம்வந்ததெனத்திகைத்துச் - - *
சிற்றடியைக்கண்டாரிரண்டாமொருமுகமாய். - (௩௱௨௰)

சென்றார்தெருத்துறந்தேன்மொழியேதேன்மொழியே - *
என்றார்மதிமறந்தவேந்திழையைவந்துகண்டார். (௫௨௧)

கையணையிற்சாய்ந்துகலைகுலையக்கண்முகிழ்ப்பத் - - *
தையல்கிடப்பத்தறியாமற்பாங்கியர்கள். - - (௫௨௨)

தூக்கமோவெம்பசியோதோழியரைக்காணாத - - *
ஏக்கமோமன்மதன்கண்ணேறுபட்டகாரணமோ. (௫௨௩)

தெய்வக்குறையோநாஞ்செய்வதென்னென்றேதிகைத்துக் - *
கையாற்கலைதிருத்திக்கட்டியெடுத்தணைத்தார். - (௫௨௪)

மாந்தளிரால்வீசிமதிமுகத்தில்வெயர்துடைக்க - - *
ஏந்திழையாண்மூர்ச்சைதெளிந்தேங்கினள்போலிருந்தாள்.

ஒண்டொடியார்மங்கையுடலிற்குறியிடங்கள் - - *
கண்டிதுவேதென்றார்கள்ளிக்கும்வாயுமுண்டோ. (௫௨௬)

கைநடுங்கிக்கானடுங்கிக்கன்னியர்களெல்லாரும் - *
மெய்நடுங்கித்தானேவிசாரமிட்டுக்கொண்டுநின்றார். (௫௨௭)

வல்லணையகொங்கைமடமானைக்கைலாகின் - *
மெல்லமெல்லத்தாநடத்திவீட்டிற்கொடுபோனார். (௫௨௮)

பாகார்மொழியாளைப்பஞ்சணையிற்சேர்த்திடவும் - *
மோகவனன்மீறழுத்தம்படிபார்த்ததுவே. - - (௫௨௯)

முன்கையணிவளைகண்மூச்செறியக்காய்ந்துருகி - - *
மென்குவளைக்கண்ணீரின்வெள்ளத்தாலாறியதே. (௱௫௰)

வீசியவேளம்புமெழுகுபாவைக்குளுருக் - - *
கூசிகள்போற்பாயவுருக்கூசியுள்ளயர்ந்தாள். - (௱௫௧)

கன்னிசகியார்கருத்திற்சகியாராய் - - - - *
ஒண்டொடிக்குச்சீதவுபசாரஞ்செய்யலுற்றார். - (௱௫௨)

செய்தவுபசாரமெலாந்தேனுள்பொருளாகி - - *
வைதுமடவாளாயணங்கொதுத்துச்சொல்லலுற்றாள் - (௱௫௩)

வேடையெலாந்தீர்வென்மேல்வீசுவார்போலவெயிற் - *
கோடையெலாமென்மீதிற்கொண்டுவந்துவிட்டீரோ. (௱௫௪)

சாரத்தைநீக்கித்தனிப்புலியைப்பாயவிட்டு - - *
நீருமலைத்தென்றலென்றீர்நிட்டூரஞ்செய்திட்டீரோ. - (௱௫௫)

காமசரமெல்லாங்கனகமஞ்சமேற்பரப்பிப் - - *
பூமலரென்றீர்மடவீர்பொய்யும்படித்தீரோ. - (௱௫௬)

சேலென்றகேதனத்தோன்றேமாலையைப்புழிந்து - - *
பாலென்றுதந்தீர்பழிகாரரானீரோ. - - (௱௫௭)

மங்கைநல்லீரின்றென்வனமுலைக்குநீரணிந்த - - *
குங்குமமுஞ்சார்ந்துங்குளிர்ந்தபனிநீரும். - - (௱௫௮)

தேடிப்பார்த்தையர்பார்த்காதலனைச்செல்லவிட்டு - - *
ஊடுமனையாண்மனம்போற்கொதிக்குதென்றாள் - (௬௩௯)

என்னபுலம்பிப்பிவன்படும்பாடத்தனையும் - - - *
அன்னைக்குச்சொன்னாரவள்பதறியோடிவந்தாள். (௬௪௰)

பெற்றெடுத்ததன்மகளைப்பேய்க்கிழவியானாலும் - *
குற்றமறநோக்கிக்குறிப்புறவேகண்டுகொண்டாள். (௬௪௧)

செவ்வாயிதழ்க்குறியுஞ்செப்புமுலைமேற்பதித்த - *
கைவ்வாளுகிர்க்குறியுங்கண்மையழிந்ததுவும். - (௬௪௨)

பார்த்தாளுடன்போனபாங்கியரைச்சண்டையிட்டாள் - *
வேர்த்தாண்மகளைவேகுண்டாள்விசாரமிட்டாள் (௬௪௩)

நீங்களறியாமலிந்தநேரிழையைப்பூக்காவில் - - *
ஆங்கொருவன்கூடியணைந்தவகைசொல்லுமென்றாள். (௬௪௪)

போனதுவும்வெவ்வேறாய்ப்பூவெடுக்கமங்கைதனி - *
ஆனதுவுங்கண்டதுவுமாயிழையார்தாமுரைத்தார். - (௬௪௫)

சந்தமுலையாருரைக்கத்தையல்குணமாலைசொல்வாள் - *
அந்தவனத்திலசுகையுற்றவேளையிலே. - (௬௪௬)

சுற்றியடிபார்த்தேன்றுரைகளடிபோலதிலே - - *
உற்றசங்கமோகையுடன்பதுமரோகைகண்டேன் - (௬௪௭)

அச்சுவடுகண்டவசுகையுமல்லாத்புவனம் - - - *
மெச்சுநிலைக்கோட்டைவேள்பெரியநாகேந்திரன் - (௱௪௮)

வேட்டைக்குவந்தானுமௌனத்தொனியுமந்தக் - - *
காட்டில்வெடித்தொனியுங்காதாரக்கேட்டதென்றாள். (௱௪௯)

அப்படியோசொல்லென்னமிர்தகுணமாலைமின்னே - *
செப்படிவித்தைத்தொழிலிற்சித்திரத்தைக்கண்டாமென்று.(௱௫௰.

வண்டார்குழலாய்மதன்பெரியநாகேந்திரன் - - *
கண்டானுனீன்றகரும்பைவிட்டுப்போவானோ - (௱௫௧)

அந்தத்துரையழகைக்கண்டாலுநானீன்ற - - *
பைந்தொடியுந்தானொருகைபாராமன்மீள்வாளோ (௱௫௨)

எம்மையறியாமலிவளெப்படிதான்கைகலந்தாள் - - *
நம்மையறியாமலந்தநாயகனெவ்வாறணைந்தான். (௱௫௩)

கன்னமொருவரிட்டாற்காவலுண்டேயுரைப்பேம் - *
மன்னவனேயிந்தவலுமைசெய்தாலார்க்குரைப்பேம். - (௱௫௪)

பாகார்மொழியாளைப்பன்றிமலைச்சாரலுக்குப் - - *
போகாதேயென்றுசொன்னேன்புத்தியாக்கேட்டாளோ.௱௫௫)

பேய்வார்த்தையானாலும்பெற்றபிள்ளைகேட்பதுண்டு - *
தாய்வார்த்தைகேளாத்தங்கச்சிரூப்பாச்சே. - - (௱௫௬)

தெண்டிக்குமன்னவனைச்சேர்ந்தவளுக்காரியைநான் - *
கண்டிக்கப்போகாதேகள்ளியென்னக்கூடாதே. (௫௭)

மானபரன்பெஞ்சைமகாசனைமருவப் - - - *
போனவளேயன்றியிவள்பூவெடுக்கப்போனவளோ. (௫௮)

விந்தைதருமொன்பதூர்வேந்தனுக்குமோகினிமா - *
மந்திரமுண்டென்றென்மதலையறியாளோ. - (௫௯)

தூயபுகழ்பெஞ்சைத்துரைக்குநமைப்போன்மடவார் - *
ஆயிரம்பேருண்டென்றரங்கியறியாளோ. - (௬௰)

பூங்கொடிசூழ்தண்டலையிற்பூவெடுக்கப்போனவுயிர்ப் - *
பாங்கிமார்தாமிருக்கப்பாலவதனைச்சேர்வானேன். (௬௧)

அந்நாளில்வேதனமைத்தபடியேயொழிய - - *
மின்னாரைநோவதுவும்வீணேபிதற்றுவதும். - - (௬௨)

நம்மையறியாமனடந்ததெல்லாம்யாவருக்கும் - *
சம்மதிக்குங்காரியமேதையனடத்திவந்தான். - (௬௩)

மன்னனழகுக்கென்மகளேமனையாளாம் - - - *
கன்னியழகுக்குமந்தக்காவலனேகாதலனும் - (௬௪)

மாவடுக்கண்மங்கையென்னமாதவமுன்செய்தாளோ - *
பூவெடுக்கப்போனவள்பதையலெடுத்துவந்தாள். - ([illegible])

ளிப்பு

ப்பழநழுவிப்பாலில்விழுந்ததுநான் - - *
செய்ததவமோமகண்முன்செய்தபூசாபலமோ. - (௱௬௬)

என்றுமகளையிருகையாற்றான்றழுவி - - - *
ஒன்றக்குமஞ்சாதேயோகமுமுன்பங்காச்சே. - - (௱௬௭)

சிந்தமகூளேந்த்ரனருள்செயபெரியநாயகனைச் - *
சொந்தமாக்கூடிச்சுகித்துமிகவாழ்ந்திரென்றாள். - (௱௬௮)

காவலவுமின்னேகனகபல்லக்கேறியிந்தப் - - - *
பூவுலகுகொண்டாடப்புத்திரனைப்பெற்றிரென்றாள். (௱௬௯)

என்னுமந்தவேளைசிலவேத்திழையார்சூழ்ந்துவர - *
வன்னமணிப்பொற்சிவிகைவாயில்வரக்கண்டாளே. (௱௭௰)

கண்டாண்மகளைக்கனகபல்லக்கேற்றிப்பின்பம் - - *
கொண்டாள்குணமாலைகூடச்செலவிடுத்தாள். - (௱௭௧)

சொற்படியேயந்தத்துரைப்பெரியநாகையனும் - *
கற்பகத்தைக்கூடியவள்காதல்கொண்டகாதலியாய். - (௱௭௨)

பூதலத்தோர்வாழ்த்தநல்லபுத்திரனைப்பெற்றெடுத்து - *
மாதுநவரத்நமாலைமகிழ்வுற்றிருந்தாள். - - (௱௭௩)

சீர்வாழிலோகஞ்செழித்துமிகவாழியன்ப - - *
ஊர்வாழிவெள்ளையுபயக்கொடிவாழி. - - (௱௭௪)

பெஞ்சைநகர்வாழிபெரியநாகேந்த்ரதுரை - - *
கஞ்சமலர்மாதுகருணைபெற்றுவாழியவே. - (௱௭௫)

கூளப்பநாயக்கன்காதல் - முற்றிற்று.